*நூல் மீளாய்வு:*

# மர்ஹூம் டாக்டர் எம்.எம். மீரா லெவ்வை எழுதிய சம்மாந்துறை சரித்திரம், பதிப்பாசிரியர் எம்.எல்.ஏ. காதர், (2018), கொழும்பு / சென்னை: குமரன் புத்தக இல்லம், ISBN: 978-955-659-551-2, ப.ப. 01-198

**எம்.எம். பாஸில்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானத்துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: fazrasm@seu.ac.lk

*பல்லின சமூக அமைப்பைக்கொண்ட இலங்கையில் சிறுபான்மையினரின் வரலாறு சவால்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. குறிப்பாக போருக்குப் பிந்திய இலங்கையில் முஸ்லிம்களின் வரலாற்றுத் தொகுப்பு கட்டாயத் தேவையாக மாறியுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு குறித்து திருப்தி அளிக்கக் கூடிய ஒரு விஞ்ஞான பூர்வமான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலையளிக்கிறது. இருப்பினும் 1980களைத் தொடர்ந்து கலாநிதி சுக்ரி அவர்களின் 'இலங்கையின் முஸ்லிம்கள்' எனும் பதிப்பும் குமாரி ஜெயவர்தர்தனா, வசுந்தரா மோகன், லோனா தேவராஜ் ஆகியோரின் ஆய்வு முயற்சிகள் போன்றனவும் முஸ்லிம்களின் வரலாற்றை ஓரளவு வெளிக்கொணர வாய்ப்பளித்திருக்கிறது. மேலும் கலாசார மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுசரணையில் சில மாவட்டங்களில் இடம் சார் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து முஸ்லிம் கிராமங்கள் குறித்த வரலாறுகள் அண்மைக் காலத்தில் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன.*

*மர்ஹூம் டாக்டர் எம்.எம். மீரா லெவ்வை எழுதி, பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்ட நூலே 'சம்மாந்துறை சரித்திரம்' எனும் நூலாகும். பல வரலாறுகள் மழுங்கடிக்கப்பட்டு வரும் இந்நவீன உலகில், வரலாறுகளை மீட்டிப் பார்க்கும் இலக்கியங்களுக்கு ஒரு தனியிடம் உண்டு. அந்தவகையில் சம்மாந்துறை சரித்திரம் எனும் நூல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இந்நூலைப் பொறுத்தவரை சம்மாந்துறை சரித்திரம் என்பதற்குப் பதிலாக சம்மாந்துறை முஸ்லிம்களின் சரித்திரம் என்று சொல்லுமளவுக்கு விடயங்களைத் தாங்கி நிற்கின்றது. அதுமட்டுமன்றி முழு இலங்கை தொடர்பான சில வரலாற்றுக் குறிப்புகளும் இந்நூலின் முதற்பாகங்களில் அடங்கியுள்ளன. இலங்கை முஸ்லிம்கள் தமது இருப்பு, அடையாளம் பற்றிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற இவ்வேளையில் அவர்களின் சரித்திரத்தை மீட்டிப்பார்ப்பதற்கான சான்றாக இது கவனத்திற்கொள்ளப்படுகின்றது. முஸ்லிம்களின் வழிபாடுகள், கலாசாரம், பொருளாதார நடவடிக்கைகள் போன்ற வாழ்வியல் அம்சங்கள் மிக எளிய நடையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் வாழும் முஸ்லிம் சமுதாயத்தின் வாழ்வியல் அம்சங்களை விட அதிக சுதேசியத்தன்மையை பிரதிபலிக்கத்தக்கதாக ஆரம்பகால முஸ்லிம் சமூகம் காணப்பட்டமையை இந்நூல் எமது கண்முன்னே கொண்டு வருகின்றது. நூல் முகம், அறிமுகத்தைத் தொடர்ந்து பதினொரு அத்தியாயங்களில் சம்மாந்துறை சரித்திரம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூல் முகம் மற்றும் அறிமுகத்தில் மக்கள் ஆரம்ப காலங்களிலிருந்து இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தென்னிந்திய அரேபிய வர்த்தகர்களின் வழித் தோன்றல்களாகவே கிழக்கிலங்கை மற்றும் சம்மாந்துறை முஸ்லிம்கள் காணப்படுவதாக குறிப்பிடுகின்றது. மேலும் சம்மாந்துறை விவசாய சமூகமாக உருவான விதம் பற்றியும் அலசுகின்றது. இந்நூலின் முதல் நான்கு அத்தியாயங்கள் இலங்கை வரலாற்றையும் ஏனையவை சம்மாந்துறை வாழ்வியற் கோலங்களையும் முறையே விபரிக்கின்றன.*

*இலங்கையின் வரலாறு சிங்களவர்களின் ஆட்சிக்காலம், ஐரோப்பியர் காலம், கண்டி இராச்சியம் பிரித்தானியர் காலம் என்ற அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஊரும் வரலாறும் என்ற பெயரில் சிங்கள ஆட்சிக் காலம் முதலாவது அத்தியாயமாக அமைந்துள்ளது. வரலாற்றுக் காலம் முதல் சம்மாந்துறை மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு கிராமமாகக்*

காணப்பட்டதுடன் பின்னர் அது அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டமை குறித்த விடயங்கள் அறிமுகப் பகுதியிலும் இம்முதல் அத்தியாயத்திலும் காணப்படுகின்றன. சம்மாந்துறை முஸ்லிம் கிராமத்தின் வயதை அங்கு காணப்படும் முகையதீன் பள்ளிவாசலின் வயதுடன் ஆசிரியர் ஒப்பிடுகின்றமை அக்கிராமத்தின் புராதனத் தன்மையை புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றது. அத்துடன் சம்மாந்துறை தமிழ்ப் பகுதியில் காணப்படும் முக்குவர்கள் பற்றியும் வீரமுனை சீர்பாதகக்காரர்கள் பற்றியும் தொட்டுச் செல்லும் இவர் முஸ்லிம்களின் வருகை பற்றி விரிவாக கலந்துரையாடுகின்றார். வியாபார நோக்கங்களுடன் இலங்கைக்கு வருகை தந்த அரேபியர், முதலில் மேல் மாகாணம் மற்றும் வட மேல் மாகாணத்தில் குடியமர்ந்ததாகவும் பின்னர் இலங்கையின் பல பாகங்களில் குறிப்பாக கிழக்குப் பகுதியில் குடியேறியதாகவும் குறிப்பிடுகின்றார். அது மாத்திரமன்றி வியாபாரத்தில் மட்டும் பிரபல்யம் பெற்றிருந்த முஸ்லிம்கள் விவசாயத்தில் ஊக்கம் கொண்டதுடன் சம்மாந்துறை விவசாய சமூகமாக மாறியது போன்ற பல விடயங்கள் எழுத்துருப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சம்மாந்துறை ஊரின் பெயர் உருவான விதம், மக்களின் அபிமானமிக்க அவுலியாக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டமை, மக்கள் அதனைப் புனிதமாக இன்றுவரை பின்பற்றுகின்றமை, வன்னியர் வரலாறு, அங்கு காணப்பட்ட துறைமுக போக்குவரத்து வசதிகள் தொடர்பாகவும் விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வத்தியாயத்தில் சம்மாந்துறையின் வாழ்வியல் சார் அம்சங்களுள் அவர்களது வீட்டின் அமைப்பு, நடை, உடை, பாவனை வைத்திய முறைமைகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக கண்டி இராச்சிய காலத்தில் காணப்பட்ட மன்னர்களின் நிர்வாக, நீதி முறைமை பற்றிய விடயங்களை தருகின்றமையானது ஆரம்ப கால சம்மாந்துறையின் நீதி, நிர்வாக முறைமை பற்றிய புரிதலை ஏற்படுத்த போதுமானதாக உள்ளது.

ஐரோப்பியர் வருகை என்ற இரண்டாவது அத்தியாயம் இலங்கையில் ஐரோப்பியரின் வருகை மூலம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையும் அது மக்களின் வாழ்வியலில் ஏற்படுத்திய மாற்றங்களையும் விபரிக்கின்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் முறையே இலங்கையை ஆட்சி செய்த போது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறான நிர்வாக நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுவதாக இவ்வத்தியாயம் காணப்படுகின்றமை தற்போதைய நிர்வாக முறையின் தோற்றத்தை விளங்கிக் கொள்வதற்கு வழிவிட்டுள்ளது.

இந்நூலின் மூன்றாவது அத்தியாயம் கண்டியில் ஆட்சி மாற்றம் என்ற தலைப்பில் காலனித்துவ காலத்தில் கண்டி இராச்சியம் தனியாக மிளிர்ந்தமை மற்றும் பிரித்தானியரால் கண்டி கைப்பற்றப்பட்டமை போன்ற விடயங்களைத் தொகுத்துரைக்கின்றது. அதிலும் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயர் மேற்கொண்ட சண்டைகளில் அக்காலனித்துவத்திற்கு எதிராக செயற்பட்ட 196 சுதேசிகள் தேசத் துரோகிகளாக உத்தியோகபூர்வ பிரகடனம் வெளியிடப்பட்டதுடன் அதில் ஏழு பேர் கிழக்கிலங்கையை சேர்ந்த முஸ்லிம்கள் என்பதை நினைவு கூறுகின்றார். அதில் இரண்டு பேர் கல்முனையையும் ஒருவர் சம்மாந்துறையையும் இன்னுமொருவர் மருதமுனையையும் ஏனையவர்கள் திருகோணமலையையும் சேர்ந்தவர்களாவர். இவ்வாறு தேசத் துரோகிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 196 பேரும் மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவை ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய வீரர்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டனர். இவ்வாறான விடயங்கள் குறிப்பிடப்பட்டதிலிருந்து அந்நிய ஆட்சிக்கு எதிராக இலங்கை சமூகமும் முஸ்லிம்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை புலனாகின்றது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தை விபரிப்பதாக நான்காவது அத்தியாயம் விளங்குகின்றது. அந்தவகையில் இவ்வாட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், நிர்வாக, நீதி முறைமை, சட்டவாக்க சபை, அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் என்பன தொகுத்து நோக்கப்பட்டுள்ளமை நவீன அரசியலின் ஆரம்பத்தை எண்ணத் தோன்றுகின்றது. மேலும் 1915ஆம் ஆண்டைய சிங்களவர் - முஸ்லிம்களுக்கிடையிலான இனக்கலவரம் பற்றிய விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை வரலாற்று ரீதியாக இவ்விரு இனத்தவர்களுக்கு இடையில் காணப்படும் மறைநிலை உறவை பிரதிபலிப்பதாக சிந்திக்க வைக்கின்றது. மேலும் இலங்கையின் முதல் முஸ்லிம் பிரதிநிதித்துவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை முஸ்லிம் அரசியலின் ஆரம்பத்தையும் இரண்டாவது முஸ்லிம் பிரதிநிதித்துவம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நியமிக்கப்பட்ட விடயம் கிழக்கிலங்கையில் முஸ்லிம் அரசியல் பற்றியும் விளங்கிக் கொள்ள

ஏதுவாகின்றது. பிரித்தானிய முடி, ஆளுநர்கள், தேசாதிபதிகளின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளமை அவ்வக்காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அறிந்து கொள்ள உதவுகின்றது.

இவ்வாறு இந்நூலின் முதல் நான்கு அத்தியாயங்களும் இலங்கையின் பொதுவான வரலாற்றையே பெரிதும் விபரிப்பதாக உள்ளன. அதனைத் தொடர்ந்துவரும் அத்தியாயங்கள் சம்மாந்துறையின் சரித்திரத்தை துல்லியமாக படம்பிடித்துக்காட்டுவதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

அடுத்த அத்தியாயமானது கிராமிய வாழ்வியற் கோலங்கள் பற்றி தெளிவுபடுத்துகின்றது. அதனடிப்படையில் ஆரம்ப கால மக்கள் குடி, ஜாதி போன்ற மரபை ஒட்டி வாழ்ந்தாலும் முஸ்லிம்கள் ஜாதி என்ற அடிப்படையில் தமது வாழ்வியற் கோலங்களை அமைக்கவில்லை எனக் குறிப்பிடுவதன் மூலம் முஸ்லிம்கள் ஜாதி என்ற விடயத்துக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை என்பது புலனாகின்றது. அத்துடன் அயலில் உள்ள பெயர்பெற்ற முஸ்லிம் கிராமங்களும் இதனுள் பேசப்படுகின்றன. மேலும் சம்மாந்துறை மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள், பயிர்ச்செய்கை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அக்காலத்தில் பின்பற்றப்பட்ட வைத்திய முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அங்கு எவ்வாறான நோய்க்கும் மந்திரித்து அச்சிரம் கட்டுதல் பிரதான வழிமுறையாகக் காணப்பட்டதுடன் பல்வேறு மூடநம்பிக்கைகளையும் அம்மக்கள் கொண்டிருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அதன் ஒரு அம்சமாகவே பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் விடயத்திலும் அவர்கள் பிறந்த நாளை வைத்தே பெயரிட்டனர் என்ற விடயம் சமகாலத்தவர்களை வியக்க வைக்கின்றது.

விவசாயப் பொருளாதாரம் தொடர்பான விடயங்களைத் தருவதாக ஆறாவது அத்தியாயம் காணப்படுகின்றது. போகங்கள், விதைப்பு, நீரிறைத்தல், அறுவடை போன்ற விடயங்கள் முறையே விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வத்தியாயத்தின் சிறப்பம்சம் யாதெனில் இவ்விவசாயப் பொருளாதாரத்திற்கு பேச்சுவழக்கில் காணப்பட்ட சொற்களை தற்காலப் பொருளுடன் எடுத்துரைக்கப்பட்டதாகும். சிலவேளை தற்கால விவசாயிகள் கூட தமது தொழிலில் நடைமுறையில் பேசப்பட்ட இச்சொற்களுக்கு புதியவர்களாக இருக்கக்கூடும். மேலும், இவ்வத்தியாயத்தில் அக்காலத்து விவசாய உற்பத்தி அளவு முறைகள், கூலி, நெல்லினங்கள் என்பன பற்றிய விடயங்களையும் ஆசிரியர் வர்ணனையுடன் எடுத்துரைக்கின்றார்.

இன்னும் கலாசார நிகழ்வுகளை சித்தரிப்பதாக நூலின் ஏழாவது அத்தியாயம் காணப்படுகின்றது. சம்மாந்துறையில் முஸ்லிம்களுக்கென்று தனியான நுண் கலையை கொண்டிராத போதும் அரபிகளின் கலாசார அம்சங்களுள் சிலவற்றைப் பின்பற்றியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அத்துடன் மார்க்கக் கல்வியைப் போதிக்கும் மதரசாக்கள் ஆரம்ப காலத்திலிருந்தே காணப்பட்டதுடன் சம்மாந்துறை அரசினர் பாடசாலை 1915ஆம் ஆண்டு முதன்முதலாக தாபிக்கப்பட்டமையையும் சுட்டிக்காட்டுகின்றார். அதுவே தற்போது காணப்படும் மகா வித்தியாலயம் என்பதிலிருந்து அதன் நீண்ட கால வரலாற்றை உணர்த்துகின்றார். இது தவிர தமிழர்கள், முஸ்லிம்கள் இணைந்து வாழ்ந்த பகுதியாகையால் ஒரு சில கலாசார ஒன்றிணைப்பு காணப்பட்டமையை சுட்டிக்காட்டுகின்றார். புதுமனை புகுதல், பெண் பார்த்தல், திருமணச் சடங்குகள், பூப்பெய்தல் போன்ற விடயங்களில் ஒற்றுமை காணப்பட்ட போதும் கந்தூரி, சுன்னத்துக் கல்யாணம், மவுத்து, கப்று, அவுலியா நேசம், விருந்துகள் போன்ற தனித்துவமான கலாசாரத்தைப் பின்பற்றி வந்துள்ளமையை ஆசிரியர் சுவாரஷியமாக எடுத்துரைத்துள்ளார். இவர்களின் திருமண விடயத்தில் பிரதானமாக குடி, குடி மரைக்கார் என்ற அம்சம் முக்கியம் பெற வந்ததையும் சுட்டிக்காட்டுகின்றார்.

பள்ளிவாசல்களில் கடமையாற்றிய முக்கிய மரைக்கார்களையும் அவர்கள் ஆற்றிய கடமைகளையும் விபரிப்பதாக எட்டாவது அத்தியாயம் விளங்குகின்றது. ஆசிரியர் மரைக்கார் சபை முறையும் வழிபாட்டுத்தலங்களும் என்ற தலைப்பில் இவ்விடயத்தை ஆழ்ந்து நோக்கியுள்ளார். பள்ளிவாசல்களில் இடம்பெற்ற மரைக்காயர் சபைக் கூட்டம் இங்கு குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன் அதன் மூலமே மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது என்பது அக்காலத்து மக்களின் அபிமானம் பெற்ற ஒன்றாக மரைக்காயர் சபையை வெளிப்படுத்துகின்றது. இவ்வத்தியாயத்தில் சம்மாந்துறையில் காணப்படும் பள்ளிவாசல்கள், சேத்திரங்கள் பற்றியும்

விபரிக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக மக்கள் ஞானிகளாகக் கருதும் அவுலியாக்களின் கபுறு, அடக்கஸ்தலம் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை அவுலியாக்கள் தரிசிப்பு நடைமுறை மிக நீண்ட கால நடைமுறை என்பதை உணர்த்துகின்றது.

தொடர்ச்சியாக சம்மாந்துறையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களை விபரிப்பதாக ஒன்பதாவது அத்தியாயம் அமைந்துள்ளது. இதன்போது ஏற்பட்ட பாதிப்புகளும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளன. 1848ஆம் ஆண்டு முதலாவது சூறாவளி அடித்ததாக குறிப்பிடும் ஆசிரியர் அதனைத் தொடர்ந்து பல்வேறு சூறாவளி, புயல், மழை, வெள்ளம் போன்ற அனர்த்தங்களுக்கும் இக்கிராமம் முகங்கொடுத்ததை வெளிக்கொண்டு வருகின்றார். அது மட்டுமன்றி வாந்திபேதி, கொலறா போன்ற நோய்கள் ஏற்பட்டு, மக்கள் தொடர்ச்சியான இன்னல்களுக்கு உட்பட்டதும் நினைவுகூரப்பட்டுள்ளது.

அடுத்து வரலாற்றுப் பதிவாக பத்தாவது அத்தியாயம் காணப்படுகின்றது. இதில் அரச துறை நியமனங்கள் பற்றியும் வன்னியனார் நியமனம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் முக்கிய நிகழ்வுகளின் சுவடுகள் கால அட்டவணை அடிப்படையில் வெளிக்கொண்டு வரப்பட்டமை சம்மாந்துறை மட்டுமன்றி இலங்கை, உலக நிகழ்வுகள் பற்றியும் அக்கால மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது.

சம்மாந்துறை மண்ணில் பல நூறு வருடங்களாகப் பேசப்பட்ட குடும்ப விபரங்களை உள்ளடக்கியதாக மானிய முறை என்ற அத்தியாயம் இறுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் மானிய முறையை பின்பற்றக்கூடிய போடிமார்களாகவும் காணப்பட்டனர். இக்குடும்பங்கள் சம்மாந்துறையில் இன்றும் பேசப்படுகின்றன. சம்மாந்துறையில் அலிலெவ்வை குடும்பம், முகம்மது போடியார் குடும்பம், செயிலான்குட்டிக் குடும்பம், கிக்கிலிப் பேயர் குடும்பம் என நாற்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களை ஆசிரியர் அடையாளப்படுத்தியுள்ளார். இது குடும்பங்கள் பற்றிய ஆவணத் தொகுப்பாகக் காணப்படுவதுடன் ஒரு சமூகம் தனது வரலாற்றைத் திரும்பிப் பார்க்க இது மிக அவசியமாகின்றது. இவர்கள் ஏனைய தமிழ் தலைவர்களுடன் இணக்கப்பாட்டுடன் காணப்பட்டமையையும் இவ்வத்தியாயம் குறிப்பிட்டுக்காட்டுகின்றது. தவிர இவர்கள் அனைவரும் விவசாய உற்பத்தியிலே கடுமையான உழைப்பாளிகளாகவும் முயற்சியாளர்களாகவும் காணப்பட்டதாக இவ்வரலாற்று நூல் சுட்டிக்காட்டுகின்றது. இவ்வாறான விடயங்களுடன் இந்நூலின் பிற்பகுதியில் கலைச்சொற்கள், 1982இற்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முஸ்லிம் அரசியல், சமூக தலைவர்களின் புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இது தமது முன்னோர்கள் பற்றிய அறிமுகத்தை தற்கால சந்ததியினருக்கு வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. மொத்தத்தில் சம்மாந்துறை மக்களின் வாழ்வியலை மிகுந்த வர்ணனையுடனும் தகுந்த எடுத்துக்காட்டுகளுடனும் சுவாரஷியமாக இந்நூலின் அத்தியாயங்கள் எடுத்துரைக்கின்றன.

விமர்சன அடிப்படையில், இந்நூலில் கூறப்படும் எல்லா வரலாற்று ஆதாரங்களுடனும் உடன்பட முடியவில்லை. இருந்தாலும் எழுத்தாளர் தான் வாழ்ந்த கால சூழலில் நிலவிய விடயங்களை அடிப்படையாகக்கொண்டு, தனது பிரதேசத்தின் வரலாற்றை தொகுப்பதற்கு எடுத்த முயற்சியானது பாராட்டத்தக்கது. மிகக் கவனமாக நூலாசிரியரின் கருத்துக்களை வெளிக்கொணர பதிப்பாசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்கள் முயற்சித்திருக்கிறார். ஒரு வரலாற்று ஆய்வில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சான்றாதாரங்கள், உசாத்துணை என்பன தெளிவாகக் குறிப்பிடப்படாமை இந்தத் தொகுப்பின் பலவீனம் என்றே கருத வேண்டியுள்ளது. இவரது வரலாற்றுப் பதிவுகள் மிகவும் நுணுக்கமாக விமர்சனப் பார்வைகொண்டு சற்று விரிவாக ஆராயப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். மேலும் இந்நூலானது சம்மாந்துறை பற்றிய ஒரு சிறந்த வரலாற்றை வெளிப்படுத்தக்கூடிய பெரியதோர் ஆய்வுக்கான ஒரு மூலமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்விடைவெளி பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்வினைப் பதிப்பாசிரியராகக்கொண்டு அண்மையில் வெளியிடப்பட்ட ‘சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும்’ எனும் நூலினூடாக பூர்த்திசெய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது.